முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கில் கூட்டுறவுத் துறை சார்பில் தமிழ்நாடு முழுவதும் 1000 'முதல்வர் மருந்தகங்களை' காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், மங்களபுரம், திம்மநாயக்கன்பட்டி, அத்தனூர் ஆயிபாளையம் மற்றும் பிள்ளாநல்லூர் ஆகிய முதல்வர் மருந்தகங்களில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில் முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் கே.பி.இராமசுவாமி, இணைபதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் க.பா.அருளரசு உட்பட துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சேலம் மாவட்டத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், பிப். 26 - சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் 23.02.2025 அன்று சேலம், மணக்காடு காமராஜர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் 150 கர்ப்பிணிப் பெண்களுக்கு தமிழ்நாடு அரசின் சீர்வரிசைப்பொருட்களை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசியதாவது:

முதலமைச்சர் அவர்கள் மகளிர் முன்னேற்றத்திற்காக பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் சார்பில் ஊட்டச்சத்து இயக்கத் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து மாத விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இன்றைய தினம் சேலம் மாவட்டத்தில் உள்ள 22 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் கர்ப்பிணிப் பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு விழா நடைபெறுகிறது. இவ்விழாவில் 150 கர்ப்பிணி பெண்களுக்கு புடவை, மஞ்சள், குங்குமம், வளையல், வெற்றிலை பாக்கு உள்ளிட்ட சீர்வரிசை தாம்பூலங்கள் மற்றும் 5 வகை உணவுகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது.

மிகவும் உணர்வுபூர்வமான இந்த விழாவில் பங்கேற்று வாழ்த்துவது உள்ளபடியே மனதிற்கு நெகிழ்ச்சியுடையதாக அமைந்துள்ளது. கர்ப்ப காலம் என்பது ஒவ்வொரு தாயிற்கும் மறுபிறவி என்றே குறிப்பிடும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதை உணர்ந்த தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் கர்ப்பிணிப் பெண்களுக்கு இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத அளவிற்கு பல் வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள். கர்ப்ப காலங்களில் பொருளாதார வசதியற்ற குடும்பத்தை சார்ந்த பெண்களும் தேவையான ஊட்டச்சத்து பெறுவதை உறுதிபடுத்தினார். மகப்பேறுக்கு நிதியுதவி, தடுப்பூசி, இரும்புச்சத்து மருந்துகள், ஊட்டசத்து மாவு, சேவையாற்றிய செவிலியர்களுக்கு ஊக்கப்பரிசு என கர்ப்பிணிகள் மீது தனிக்கவனம் செலுத்தும் அரசாக தமிழ்நாடு அரசு திகழ்கிறது. அந்தவகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசு ஒரு தந்தையாக இருந்து மகப்பேறு திட்டங்களை மேம்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டுமே கர்ப்பமடைந்ததை பதிவு செய்தது முதல் கர்ப்பிணித் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலை, குழந்தை பிறந்து தடுப்பூசி செலுத்துவது, குழந்தைகளின் ஊட்டச்சத்து வரை கர்ப்பிணிகள் மீது தனிக்கவனத்துடன் கண்காணித்து மருத்துவ உதவி வழங்கி வருகிறது. அதன் ஒரு அங்கமாக கர்ப்பிணித் தாய்மார்களின் நலம் காக்கவும், தாய்சேய் நலனை மேம்படுத்தவும் விழிப்புணர்வு நிகழ்வாக இந்த சமுதாய வளைகாப்பு நடைபெற்று கொண்டிருக்கிறது.

இந்நிகழ்ச்சி சேலம் மாவட்டத்தில் உள்ள 22 வட்டாரங்களில் நடத்தப்படுகிறது. 2,200 கர்ப்பிணிகளுக்கு பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள கர்ப்பிணி பெண்களுக்கு பிறக்க விருக்கும் குழந்தையின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு வளையல், ஊட்டச்சத்துப் பொருட்கள் மற்றும் சீதனப்பொருட்களை அரசு வழங்கி வருகிறது. இந்த நிகழ்ச்சியில் மட்டும் 150 கர்ப்பிணிப்பெண்களுக்கு சீர்வரிசைப் பொருட்கள் மற்றும் 5 வகையான கலவை சாதங்கள் விருந்தாக அரசின் சார்பில் பரிமாறப்படுகிறது.

இதுபோன்ற சமூகநலத் திட்டங்கள் செயல்படுத்துவதால் கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாடானது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் குறைவானதாக அமைந்துள்ளது. குழந்தைக்கும் தாயிற்கும் பாதுகாப்பான மகப்பேறு நடைபெறும் மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. மேலும், குழந்தைகளுக்கான தடுப்பூசி வழங்குவதில் தேசிய அளவில் 51.2 % அமைந்துள்ள நிலையில் தமிழ்நாட்டில் இது 86.7% ஆக அமைந்துள்ளது. எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இது போன்ற திட்டங்கள் என்பது நமது சமூகத்தை முன்னேற்றும் சிறப்பான சமூக நல திட்டங்களாக அமைந்துள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேசினார்.

இவ்விழாவில், சேலம் மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா, அஸ்தம்பட்டி மண்டல குழு தலைவர் திருமதி உமாராணி, மாமன்ற உறுப்பினர் திருமதி சங்கீதா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்ட அலுவலர் திருமதி சுகந்தி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாக

திருவள்ளூரில் முதல்வர் மருந்தகம் திறப்பு!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மருந்துகள் விற்பனை சேவையை தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், பிப் 26- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக தமிழ்நாட்டில் 1000 முதல்வர் மருந்தகத்தினை திறந்து வைத்ததை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் வி.எம்.நகர் (ரோஸ் மஹால் எதிரில்) நடைபெறும் அரசு விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி மருந்துகள் விற்பனை சேவையினை துவக்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.08.2024 அன்று நடைபெற்ற சுதந்திரதின விழா உரையில், பொதுப் பெயர் (ஜெனரிக்) மருந்துகளையும் பிற மருந்துகளையும் குறைந்தவிலையில் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் 1000 முதல்வர் மருந்தகங்கள் துவங்கப்படும் என அறிவித்தார்கள். 1000 முதல்வர் மருந்தகங்கள் அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு முலமைச்சர் அவர்களால் சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக கலையரங்கத்தில் காணொலி வாயிலாக (Online Streaming) தொடங்கி வைக்கப்படுகிறது.

முதல்வர் மருந்தகம் அமைப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் தெரிவு செய்யப்பட்டு, தொழில் முனைவோர்களுக்கு மருந்தகம் அமைத்து உள்கட்டமைப்பு ஏற்படுத்திக் கொள்ளவும், தங்களை தொழில் முனைவோர்களாக மாற்றிக்கொள்ள ஏதுவாகவும் தொகை ரூ 150 லட்சம் மானியமாகவும், ரூ 1.50 லட்சம் மருந்து பொருட்கள் மானியமாகவும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு தொகை ரூ 100 லட்சம் மானியமாகவும், ரூ 100 லட்சம் மருந்து பொருட்கள் மானியமாகவும் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தினை பொறுத்தமட்டில் தொழில் முனைவோர்களுக்கு 15 முதல்வர் மருந்தகங்களும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 19 முதல்வர் மருந்தகங்களும் துவக்கிடதகுதிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 15 தொழில் முனைவோர் முதல்வர் மருந்தகங்களுக்கு தலா ரூ150 இலட்சம் வீதம் மானியமாகவும் 19 கூட்டுறவுச் சங்க முதல்வர் மருந்தகங்களுக்கு தலா ரூ 100 இலட்சம் வீதம் மானியமாகவும் ஆக மொத்தம் ரூ4150 இலட்சம் மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது

தமிழக அரசின் இந்த மகத்தான முதல்வர் மருந்தகம் திட்டத்தின் வாயிலாக கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் மருந்துகள் கிடைக்கவும், D. Pharm, B.Pharm படித்த இளம் தலைமுறையினர் தங்களை ஒரு தொழில் முனைவோர்களாக மாற்றி சிறப்பாக செயல்படவும் ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் அதன் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி வட்டத்தில் 3 மருந்தகங்கள், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் 3 மருந்தகங்கள், திருவள்ளூர் 12 மருந்தகங்கள், ஆவடி வட்டத்தில் 4 மருந்தகங்கள், ஊத்துக்கோட்டை வட்டத்தில் 2 மருந்தகங்கள், பூந்தமல்லி வட்டத்தில் 3 மருந்தகங்கள், திருத்தணி வட்டத்தில் 4 மருந்தகங்கள், ஆர்.கே.பேட்டை வட்டத்தில் 1 மருந்தகங்கள், பள்ளிப்பட்டு வட்டத்தில் 1 மருந்தகங்கள், ஆக மொத்தம் 34 மருந்தகங்கள் எழ எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ சேவை பணியினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் மருத்துவ சுமைகளை குறைக்கும் வகையில் துவக்கி வைத்துள்ளார் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர் தெரிவித்தார்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழிகாடுதலின்படி, மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனையின் பேரில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ். சரவணன் ஏற்பாட்டில் ஒன்றிய செயற்குழு உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம் பையர்நத்தம் ஒன்றிய கழக முகாம் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழாவை மக்களுக்கு பயனுள்ள வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவது, ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது, மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.நிகழ்வில் ஒன்றிய கழக அவைத்தலைவர் தா.மனோகரன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் தாமோதரன், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் செல்வராஜ், சக்திவேல், சண்முகம், ஜான்அக்பர், ஆபிஸ், ராஜேஸ், ரவீந்திரன், ஒன்றிய கழக நிர்வாகிகள் வே.செல்வன், இராஜேந்திரன், பன்னீர்செல்வம், இரவி, மற்றும் கிளைக்கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.02.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கூட்டுறவுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மக்களுக்கு பொது மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் கிடைக்கச் செய்யும் வகையில் "முதல்வர் மருந்தகம்" என்ற புதிய திட்டம் மூலம் முதற்கட்டமாக தமிழ்நாடு முழுவதும் 1000 மருந்தகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி தேர்வுநிலை பேரூராட்சி, முதல்வர் மருந்தகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் கலந்துகொண்டு, முதல்வர் மருந்தகத்தை பார்வையிட்டு, பொது மக்களுக்கு முதல்வர் மருந்தகத்தின் மூலம் மருந்துகளின் விற்பனையை தொடங்கி வைத்தார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஜீவா, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் திருமதி.சுந்தரி அழகப்பன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

2026 சட்டமன்றத் தேர்தல் பணிக்காக கழக வழக்கறிஞர்களுக்கு பயிற்சி பாசறை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் நடைபெற்ற கழக வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப்.26- தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 24.02.2025 அன்று மாலை 5 மணியளவில் சென்னை, தேனாம்பேட்டை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இணைச் செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், கே.எம். தண்டபாணி, சு. இராதாகிருஷ்ணன், பி.ஆர். அருள்மொழி, இரா. தாமரைச் செல்வன், ஜெ. பச்சையப்பன், சூர்யா வெற்றிக் கொண்டான், துணைச் செயலாளர்கள் பெ. ரகு, ஜி. சந்திரபோஸ், என். மருதுக ணேஷ், எஸ். ராஜா முகமது தலைமைக் கழக வழக்கறிஞர்கள் கே.ஜெ. சரவணன், வீ. கவிகணேசன், கே. மறைமலை, சுவை. கே. சுரேஷ், மு. தினேஷ்குமார், மீஞ்சூர் கே. சுரேஷ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதல்வர் பிறந்த நாள் விழாவை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

முத்தமிழறிஞர் கலைஞர் - தயாளு அம்மையாரின் மூன்றாவது மகவாகத் தோன்றி, தாயிற் சிறந்த கோயிலுமில்லை - தந்தை சொல்மிக்க மந்திரமில்லை எனும் கூற்றுக்கு ஏற்ப இளம் பருவத்திலேயே ஏழை எளியோருக்கு உதவிடும் நோக்கில், தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, படிப்படியாக கல்வியிலும், பொதுவாழ்விலும் தம்மை உயர்த்திக் கொண்டு, இன்று உலகமே வியந்து போற்றுகின்ற தமிழ்நாடு முதலமைச்சராகவும், பவள விழா கண்ட தி.மு.கழகத்தின் தலைவராகவும் திகழ்ந்து, சநாதன சக்திகளுக்கு சம்மட்டி அடி கொடுத்து, திராவிடத்தையும், தமிழையும், தமிழர்களையும் பாதுகாவல் அரணாகத் திகழ்ந்து வரும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா மனிதநேய விழாவாக தமிழ் கூறும் நல்லுலகம் 01.03.2025 அன்று கொண்டாவிருக்கிறது. அதுபோது கழக சட்டத்துறையின் மாநில - மாவட்ட - ஒன்றிய - பகுதி நிர்வாகிகள் சார்பில் மாபெரும் எழுச்சியுடன் கொண்டாடுவது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

சட்டத்துறை 3-வது மாநில மாநாடு முதல்வர் எழுச்சியுரை - நன்றி!

கடந்த ஜனவரி 18?ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற தி.மு.க. சட்டத்துறையின் மூன்றாவது மாநில மாநாட்டில் பங்கேற்று எழுச்சி உரையாற்றிய கழக தலைவர் அவர்களுக்கும், மாநாட்டிற்கு வாழ்த்து செய்தி அனுப்பி சிறப்பு செய்ததுணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மற்றும் மாநாட்டில் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புகளில் உரையாற்றிய சிறப்பித்த சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும், பங்கேற்று சிறப்பித்த அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழக செயலாளர்கள், தலைமை கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மூத்த வழக்கறிஞர்கள் ஆகியோருக்கும், மேலும் இம் மாநாடு வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பெற்றமைக்கு உறுதுணையாக இருந்த வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், மற்றும் நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள் ஆகிய அனைவருக்கும் இக்கூட்டம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையே நீடிக்கும்!

2014-ஆம் ஆண்டு பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி அமைந்த பின்னர், தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பை தொடர்ந்து செய்து வருகிறது. அவ்வப்போது, தி.மு.கழகம் மேற்கொண்ட பல்வேறு வகையானப் போராட்டங்களால், இந்தித் திணிப்பை ஒத்திவைப்பது, சால்ஜாப்பு கூறுவது என்று ஒன்றிய அரசு கேலியும் கிண்டலும் செய்து வருகிறது.

1965-ஆம் ஆண்டு மொழிப் போரைக் கண்ட தி.மு.கழகம், 1967-ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்றியவுடன், இனி இரு மொழிக் கொள்கைதான் என்று முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வெட்டு ஒன்று - துண்டு இரண்டென அறிவித்த காலத்திலிருந்து, தமிழர்கள் இருமொழிக் கொள்கையில் உறுதியாக உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இன்றைய கழகத் தலைவர் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில், எக்காரணத்தைக் கொண்டும், இந்திக்கு இங்கே இடமில்லை என்று தெள்ளத் தெளிவுற அறிவித்த பின்னரும், புதிய தேசிய கல்விக் கொள்கை, யு.ஜி.சி. வரைவுக் கொள்கை, தமிழ்நாட்டிற்கு நிதியைத் தராமல் கல்வியைச் சிதைக்கும் பஞ்சமாபாதகம், அன்னைத் தமிழ் மொழியை இரண்டாந்தரமாக்கிடும் ஈனச் செயல் போன்றவற்றை திரும்பத் திரும்ப வலியுறுத்தி, பத்திரிகை, ஊடகங்கள் மூலம் மிரட்டல் விடுத்துவரும் ஒன்றிய மனிதவள மேம்பாட்டுத் துறையின் அமைச்சர் தர்மேந்திரப் பிரதான் மற்றும் ஒன்றிய அமைச்சர்கள், பா.ஜ.க. தலைவர்கள் அனைவரது மும்மொழிக் கொள்கைப் பொய் பிரச்சாரங்கள் அனைத்தும் முனை மழுங்கச் செய்திடும் வகையில், கழக சட்டத்துறை தமது பதிலடியை விரைந்தும் - விவேகத்துடனும் செயல்படுத்திட, நாடு முழுவதும் இந்தி திணிப்பு எதிர்ப்புக் கருத்தரங்குகள், தெருமுனைப் பிரச்சாரங்களை மேற்கொள்வது என்றும், சட்டத்துறையின் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழ்நாடு புறக்கணிப்பு: ஒன்றிய அரசுக்கு கண்டனம்!

சமீபத்திய ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு எந்த நிதியும் ஒதுக்காமலும், குறிப்பாக தமிழ்நாடு என்ற பெயரே இடம்பெறாமல், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பாசிச பா.ஜ.க. மற்றும் அதற்கு உறுதுணையாக இருந்த அனைத்துக் கட்சிகளுக்கும் தமிழ்நாட்டு மக்கள் படுதோல்வியை பரிசாக அளித்த ஒரே காரணத்திற்காக சமீபத்திய ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு எந்த நிதியும் ஒதுக்காமலும், குறிப்பாக தமிழ்நாடு என்ற பெயரே இடம்பெறாமல், தமிழ்நாட்டு மக்களை ஒட்டுமொத்தமாக புறக்கணித்த ஒன்றிய அரசுக்கு இக்கூட்டம் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

வழக்கறிஞர்கள் (திருத்த) சட்ட வரைவை முற்றிலுமாகத் திரும்பப் பெறுக!

ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள வழக்கறிஞர் (திருத்த) சட்ட முன் வரைவு 2025 என்பது, பார் கவுன்சில்களின் கட்டுப்பாட்டைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, சட்டத் தொழிலின் சுதந்திரத்தைப் பறித்து, நீதித்துறையின் சுதந்திரத்தை சங்பரிவார்களின் இந்துத்வா வழிமுறையில் நாட்டின் வழக்குரைஞர்களின் குரல் வளையை நெறிப்பதாகும்.

வழக்குரைஞர், சட்டம், நீதி, நீதிமன்றங்களையும், அரசியலமைப்புச் சட்டத்தையும் சிதைத்திடும் நோக்கில், ஒவ்வொரு நாளும் கோணங்கித் தனமான முன் வரைவுகளை கொண்டு வரும், பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசு, சட்டத் தொழிலின் தன்னாட்சியை மதிக்கும் வரையில், சட்ட வரைவு - 2024ஐ முற்றிலுமாகத் திரும்பப் பெறுமாறு கழக சட்டத்துறையின் இக்கூட்டம் ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்துகிறது.

இந்த சட்ட முன்வடிவை ஒன்றிய பா.ஜ.க. அரசு உடனடியாக திரும்ப பெற வேண்டும் என்ற கருத்தை தனது அறிக்கையின் மூலம் வலியுறுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

நிதியினை உடனே வழங்க வேண்டும்!

தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு நியாயமாக தரவேண்டிய GST பங்கு தொகை, பேரிடர் கால நிவாரண நிதி, கல்வி நிதி உள்ளிட்ட நிதியினை உடனே வழங்க வேண்டுமென இக்கூட்டம் ஒன்றிய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

தமிழ்மொழியைப் புறக்கணிக்கும் ஒன்றிய அரசு!

தமிழ் மொழியின் மீது அக்கறை உள்ளது போல் நடிக்கும் ஒன்றிய பிரதமர் சில ஆயிரம் பேர் பேசும் சமஸ்கிருதத்திற்கு ரூ.1,800 கோடி நிதி ஒதுக்கியும், எட்டு கோடி பேர் பேசும் தமிழ் மொழிக்கு வெறும் ரூ.74 கோடி நிதி ஒதுக்கி பாரபட்சமாக செயல்படும் ஒன்றிய பிரதமரின் இச்செயலை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள், மன்னிக்கவும் மாட்டார்கள் என்றும் , இதுபோல் தமிழ்நாட்டையும் தமிழ் மொழியையும் ஒட்டுமொத்தமாக புறக்கணிக்கும், மாற்றான் தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்ளும் ஒன்றிய பிரதமருக்கு இக்கூட்டம் கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது.

1,000 இடங்களில் "முதல்வர் மருந்தகங்கள்"!

கடந்தாண்டு சுதந்திர தின விழா உரையின் போது, "குறைந்த விலையில் மருத்து மாத்திரைகளையும், பிற மருந்துகளையும் பொது மக்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் முதற்கட்டமாக 1,000 முதல்வர் மருந்தகங்கள் துவங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். சொன்னதைச் செய்யும் திராவிட மாடல் ஆட்சியில், தமிழ்நாடு முழுவதும் குறைந்த விலையில் 1,000 இடங்களில் "முதல்வர் மருந்தகங்கள்" 24.02,2025 திங்களன்று திறந்து வைத்து ஏழை - எளிய மக்கள் பயனடையும் வகையில் சாதனை புரிந்துள்ள கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு தி.மு.க. சட்டத்துறையின் ஆலோசனைக் கூட்டம் தமது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

2026 சட்டமன்றத் தேர்தல் பணிக்காக கழக வழக்கறிஞர்களுக்கு பயிற்சி பாசறை!

2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி கழக மாவட்டங்கள் தோறும் வழக்கறிஞர்களுக்கு தேர்தல் பணி குறித்த பயிற்சி வகுப்பு எடுத்து வழக்கறிஞர்களை தயார்படுத்தும் பணியை விரைவில் துவங்க இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதல்வரின் வழிகாட்டுதலோடு வேளாண்மை துறை அமைச்சரின் உதவியுடன் தமிழ்நாடு அரசு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை சார்பாக புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இரண்டு விவசாயிகளுக்கு அரசு மானியத்துடன் கூடிய இரண்டு ட்ராக்டர்களை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு வழங்கிய புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா இந்நிகழ்வில் மாநகர மேயர் செ திலகவதி செந்தில், துணை மேயர் லியாகத் அலி பொதுக்குழு உறுப்பினர் என்.சாத்தையா, அவை தலைவர் அ.ரெத்தினம் வேளாண்மை பொறியியல் துறை அதிகாரிகள் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.